நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## முல்லைப் பெரியாறு அணைக்கு சிஐஎஸ்எப் பாதுகாப்பு தேவையில்லை: உம்மன் சாண்டி

எம்.ஏ. பரணிதரன்

First Published : 10 Feb 2012 12:44:03 AM IST



புது தில்லி, பிப். 9: முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்புக்கு மத்திய தொழிலக பாதுகாப்புப் படையின் காவல் அவசியமற்றது; கேரள போலீசாரின் பாதுகாப்பே போதும் என்று பிரதமரிடம் கேரள முதல்வர் உம்மன் சாண்டி தெரிவித்துள்ளார்.

கேரள மாநில நலத்திட்டப் பணிகள் குறித்து பிரதமர், மத்திய அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்துவதற்காக வியாழக்கிழமை தில்லி வந்த உம்மன் சாண்டி, பிரதமரை சந்தித்துப் பேசினார்.
பிரதமருடனான சந்திப்பு குறித்து "தினமணி' நிருபருக்கு கேரள முதல்வர் உம்மன் சாண்டி அளித்த பேட்டி:

அணைக்கு மத்திய தொழிலக பாதுகாப்புப் படைக்கு (சிஐஎஸ்எப்) பாதுகாப்பு கேட்டு பிரதமருக்குத் தமிழக முதல்வர் கடிதம் எழுதுவது அவரது ஜனநாயக உரிமை. முல்லைப் பெரியாறு விவகாரத்தில், தமிழகத்துக்குத் தண்ணீரும், கேரள மக்களுக்குப் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதே கேரளத்தின் நிலைப்பாடு.

முல்லைப் பெரியாறு அணைக்குப் பல ஆண்டுகளாக கேரள காவல் துறைதான் பாதுகாப்பு வழங்கி வருகிறது. இத்தனை ஆண்டுகளில் அணையின் பாதுகாப்பில் குறைபாடு இருப்பதாக ஒரு புகாரைக் கூட தமிழகம் தெரிவிக்கவில்லை. இதுபற்றி பிரதமரிடமும் தெளிவுபடுத்தியிருக்கிறோம். கேரளத்தில் உள்ள தமிழர்கள் பாதுகாப்புடன் இருப்பதை நாங்கள் உறுதிப்படுத்துவோம்.

புதிய அணைக்கு ஆதரவாக கேரள காங்கிரஸ் கட்சி மாநிலம் தழுவிய போராட்டம் நடத்தப்போவதாக அறிவுத்துள்ளது. பிரதமர் கேட்டுக்கொண்டதால் காங்கிரஸ் கட்சி சார்பில்

அணை தொடர்பாக நடத்தப்படும் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுப்பதாக பிரதமரிடம் கூறியிருக்கிறேன் என்று உம்மன் சாண்டி தெரிவித்தார்.

முன்னதாக, முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்புப் பணியில் சி.ஐ.எஸ்.எப். படையை நிறுத்தும்படி முதல்வர் ஜெயலலிதா விடுத்துள்ள கோரிக்கை குறித்து கேரள முதல்வரின் கருத்தைப் பிரதமர் கேட்டார்.

அங்கு நிலவும் சூழ்நிலை, கேரள போலீஸ் அளித்து வரும் பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்து பிரதமருக்குக் கேரள முதல்வர் விளக்கினார்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 74.52 அடி**

First Published : 09 Feb 2012 12:56:44 PM IST

ஈரோடு, பிப். 8: பவானிசாகர் அணையில் புதன்கிழமை நிலவரபடி நீர்மட்டம் 74.52 அடியாக இருந்தது.
÷அணைக்கு விநாடிக்கு 885 கனஅடி தண்ணீர் வந்தது.அணையில் இருந்து ஆற்றில் 600 கனஅடியும், வாய்க்காலில் 2,300 கன அடியும் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.அணையில் நீர் இருப்பு 12.95 டி.எம்.சி.

**முட்டை விலை**

First Published : 09 Feb 2012 01:36:55 PM IST

நாமக்கல், பிப்.8: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை, அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.2.43, சென்னையில் ரூ. 2.50. கறிக்கோழி விலை பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை, அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.43, முட்டைக் கோழி கிலோ ரூ.29.

தினமலர்
உண்மையின் உரைகல்

**சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 7 சதவீதம் வளர்ச்சி**

பிப்ரவரி 10,2012,00:09



புதுடில்லி: நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜனவரி வரையிலான 10 மாத காலத்தில், சோயா புண்ணாக்கு ஏற்றுமதி, 30 லட்சத்து 82 ஆயிரத்து 268 டன்னாக அதிகரித்துள்ளது. இது, கடந்த நிதியாண்டின் இதே காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட, 6.62 சதவீதம் (28 லட்சத்து 90 ஆயிரத்து 815 டன்) அதிகம் என, சோயா பதப்படுத்துதல் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.சென்ற ஜனவரி மாதத்தில், சோயா ஏற்றுமதி, 4 லட்சத்து 84 ஆயிரத்து 196 டன்னாக உயர்ந்துள்ளது. இது, கடந்த நிதியாண்டின் இதே மாதத்தில், மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட, 16 சதவீதம்(5 லட்சத்து 76 ஆயிரத்து 383 டன்) குறைவு.

**பிஸ்கட் தயாரிக்க பயன்படும் அவரை விதை விலை வீழ்ச்சி**

பிப்ரவரி 10,2012,00:08

மேட்டூர்,: பிஸ்கட் தயாரிப்பிற்கு பயன்படும் பல்வேறு மூலப்பொருட்களில் ஒன்றாக அவரை விதை உள்ளது. இதன் விலை வீழ்ச்சியடைந்ததால், விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர். நங்கவள்ளி, தாரமங்கலம், அமரகுந்தி, சின்னப்பட்டி, ஆரூர்பட்டி சுற்றுப் பகுதியில் விவசாயிகள் ஆண்டுதோறும் அவரை சாகுபடி செய்வது வழக்கம். கடந்த ஆடி மாதம் சாகுபடி செய்த அவரை, மார்கழி, தை மாதம் அறுவடை செய்து, சந்தையில் விற்பனை செய்யப்படும்.



தற்போது அவரை சீசன் உச்சத்தில் உள்ளது.தாரமங்கலம் சந்தைக்கு வாரம், 10 டன் அவரை விதை விற்பனைக்கு வருகிறது. விதையை வியாபாரிகள் மொத்தமாக கொள்முதல் செய்து வெளிமாநில பிஸ்கட் தொழிற்சாலைகளுக்கு அனுப்பி வைக்கின்றனர். கடந்தாண்டு அவரை உற்பத்தி அதிகமாக இருந்தது. அதற்கேற்ப தரமும் சிறப்பாக இருந்ததால் ஒரு கிலோ, 30 முதல் 33 ரூபாய் வரை விலை போனது.நடப்பாண்டு பனிப்பொழிவு அதிகமாக இருந்ததால், அவரை விதையில் சுருக்கம் விழுந்து தரம் குறைந்து விட்டது. அதற்கேற்ப உற்பத்தியும் குறைந்து விட்டது. தரம் குறைந்ததால், அவரை விதை கொள்முதல் விலை, 29 ரூபாயாக வீழ்ச்சியடைந்தது.கடந்தாண்டை விட, நடப்பாண்டு கொள்முதல் விலை கிலோவுக்கு, 4 ரூபாய் குறைந்ததால், அவரை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**உர மானியச் சுமை ரூ.1 லட்சம் கோடியாகும்**

பிப்ரவரி 09,2012,12:11



நடப்பு நிதி ஆண்டில் மத்திய அரசின் உர மானியச் சுமை ரூ.1 லட்சம் கோடியை எட்டும் என தெரிகிறது. இதனால் உர அமைச்சகம் கூடுதல் நிதி கேட்டு நிதி அமைச்சகத்தை கோரும் என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. மத்திய பட்ஜெட்டில் நடப்பாண்டுக்கான உர மானியமாக ரூ.50,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனினும் ஏற்கனவே இதை விட கூடுதலாக ரூ.17,700 கோடி பெற்று விட்டதாகவும், நிதி அமைச்சகத்துடன் கலந்தாலோசித்த பிறகு மேலும் எவ்வளவு தொகை தேவை என்பது முடிவு செய்யப்படும் என்றும் உர அமைச்சகத்தின் செயலாளர் அஜய் பட்டாச்சார்யா தெரிவித்தார். நம் நாட்டில் யூரியா பயன்பாடு அதிகமாக உள்ளது. இதற்கான தேவைப்பாடு தற்போது ஆண்டுக்கு 2.80 கோடி டன்னாக உள்ளது. உள்நாட்டில் 2.20 கோடி டன் யூரியா உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே சுமார் 60 லட்சம் டன் இறக்குமதி செய்யப்படுகிறது. இந் நிலையில் மத்திய அமைச்சகம் புதிய யூரியா கொள்கையை அமல்படுத்த தயாராக உள்ளது. இதன் மூலம் உள்நாட்டில் உற்பத்தியை அதிகரிக்கவும், இறக்குமதியை சார்ந்திருப்பதை குறைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**கடல்வாழ் வண்ண மீன்கள் வங்கி இந்தியாவில் முதன்முதலாக துவக்கம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 10,2012,01:53 IST

பரங்கிப்பேட்டை:பரங்கிப்பேட்டையில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழக உயிரின ஆராய்ச்சி மையத்தில் இந்தியாவிலேயே முதன் முதலாக கடல்வாழ் வண்ண மீன்கள் வங்கியை தேசிய மீன்வள அபிவிருத்தி வாரிய தலைவர் கிருஷ்ணய்யா திறந்து வைத்தார்.கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டையில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கடல்வாழ் உயிரின ஆராய்ச்சி மையத்தில் தேசிய மீன்வள அபிவிருத்தி வாரியத்தின் நிதி உதவியுடன் இந்தியாவிலேயே முதன் முதலாக கடல்வாழ் வண்ண மீன்கள் வங்கி திறப்பு விழா நடந்தது. துணைவேந்தர் ராமநாதன் தலைமை தாங்கினார்.

பதிவாளர் ரத்தினசபாபதி, உயிரின ஆராய்ச்சி மைய புல முதல்வர் பாலசுப்ரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதுநிலை ஆராய்ச்சி அலுவலர் அஜித்குமார் வரவேற்றார்.விழாவில் பல்கலைக்கழக துணைவேந்தர் ராமநாதன் பேசுகையில்,"ஆராய்ச்சி என்பது ஆய்வு கூடத்தோடு நின்றுவிடாமல் சுற்று வட்டார மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் மக்களுக்கு பயன்படக்கூடிய ஆராய்ச்சிகளை இந்த கடல்வாழ் உயிரின ஆராய்ச்சி மையம் செய்து வருகிறது' என்றார்.கடல்வாழ் வண்ண மீன் வங்கியை தேசிய மீன்வள அபிவிருத்தி வாரியத் தலைவர் கிருஷ்ணய்யா திறந்து வைத்து பேசுகையில்,"தேசிய மீன்வள வாரியத்தில் பல திட்டங்கள் உள்ளன. யார் வேண்டுமானாலும் இந்த திட்டத்தின் மூலம் பயனடையலாம். கேரளா

அக்குவா வஞ்சர் இண்டர்நேஷனல் லிமிடெட் நன்னீர் வண்ண மீன்களை ஏற்றுமதி செய்கிறது. அண்ணாமலை பல்கலைக்கழக உயிரின ஆராய்ச்சி மையத்தின் துணையோடு கடல் வண்ண மீன்களை உற்பத்தியை நீங்களும் செயல்படுத்த வேண்டும் என அந்த நிர்வாகத்தை கேட்டுக்கொள்கிறேன்' என்றார்.

**தேசிய மீன்வளத்துறை அதிகாரி கடலூர் துறைமுகத்தில் ஆய்வு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 10,2012,01:34 IST



முதுநகர்:தேசிய மீன்வளத்துறை வளர்ச்சிக் கழக முதன்மை அதிகாரி கிருஷ்ணையா கடலூர் மீன்பிடித் துறைமுகத்தில் நேற்று ஆய்வு செய்தார்.கடலூர் மீன்பிடி துறைமுகத்தை நவீனப்படுத்த நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டு வருகிறது. இதனையடுத்து தேசிய மீன் வளத்துறை வளர்ச்சிக் கழக முதன்மை அதிகாரி கிருஷ்ணையா, கலெக்டர் ராஜேந்திர ரத்னு ஆகியோர் கடலூர் மீன்பிடித் துறைமுகத்தை நேற்று பார்வையிட்டனர்.பின் கலெக்டர் ராஜேந்திர ரத்னு கூறுகையில், "கடலூர் மீன்பிடித் துறைமுகத்தை நவீனபடுத்தவும், அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், உப்பனாற்றின் மறுகரையில் நடைபாதை அமைக்கவும் 16 கோடி ரூபாய் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது' என்றார்.

தேசிய மீன்வளத்துறை வளர்ச்சிக் கழக முதன்மை அதிகாரி கிருஷ்ணையா கூறுகையில்,"கடலூர் மீன்பிடி துறைமுகத்தை நவீன மயமாக்குவது குறித்த திட்ட அறிக்கையை தமிழக அரசு தேசிய மீன்வளத்துறை வளர்ச்சி கழகத்திடம் கொடுத்த பின் அதற்கான நிதி ஒதுக்க முடிவு செய்யப்படும்'

என்றார்.ஆய்வின்போது மீன்வளத்துறை உதவி இயக்குனர் விவேகானந்தன், ஆய்வாளர் நம்பிராஜ் உடனிருந்தனர்.

**தர்பூசணி விளைச்சல் குறைந்ததால் விவசாயிகள் தவிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 10,2012,00:37 IST

திருக்கோவிலூர்:திருக்கோவிலூர் பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் பயிர் செய்யப்பட்ட தர்பூசணி விளைச்சல் குறைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.திருக்கோவிலூர் அடுத்த வீரப்பாண்டி, ஒட்டம்பட்டு, அருணாபுரம், பில்ராம்பட்டு, ஆலம்பாடி உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் இந்தாண்டு தர்பூசணி பயிர் செய்யப் பட்டுள்ளது.

குறைந்த நாட்களில் சீரான தண்ணீரைக் கொண்டு குறைவான செலவில் அதிக லாபம் கிடைக்கும் பயிராக தர்பூசணி உள்ளது. இதனால் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் இந்தாண்டு தர்பூசணி சாகுபடி செய்தனர்.செடிகள் பூ வைக்கும் நேரத்தில் தானே புயல் செடிகளை புரட்டிப் போட்டது.

செடிகள் அலங்கோலமாகி பூக்கள் உதிர்ந் தன. சிறிய செடிகளாக இருந்தவை தப்பி பிழைத்து பூக்கத் துவங்கியது. மழை பெய்ததால் காய்களில் பூச்சி மற்றும் அழுகல் நோய் பாதிப்பு ஏற்பட்டது. இதற்கு மருந்து தெளித்து ஒருவழியாக காய்களை அறுவடை செய்யும் பணியை தற்போது விவசாயிகள் துவக்கியுள்ளனர்.

விளைச்சல் பாதியாக குறைந்த நிலையில், தமிழகத்தில் பனி பொழிவு இன்னும் நீடிப்பதால் அறுவடை செய்யப்படும் பழங்கள் பெங்களூருக்கு லாரிகளில் ஏற்றப் படுகிறது. ஒரு டன் 5,000 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுவது வழக்கம். இந்தாண்டு அதிபட்ச விலை 3500 ரூபாய்க்குதான் வியாபாரிகள் கொள்முதல் செய்வதாக விவசாயிகள் புலம்புகின்றனர்.

தமிழகத்தில் தற்போதுதான் வெயில் காலம் துவங்கியிருப்பதால் இனி சென்னை போன்ற நகரங்களுக்கும் தர்பூசணியின் தேவை ஏற்படும், அதன் பிறகே பழத்திற்கான விலை கூடும்.

முன்கூட்டியே பயிர் செய்த விவசாயிகள் தானேபுயல் பாதிப்பு குறைவான மற்றும் விலை போன்ற பிரச்னைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**பப்பாளி சாகுபடிக்கு 75 சதவீதம் மானியம் : கூடுதல் லாபம் பெற விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 10,2012,01:42 IST

ஈரோடு: பவானி தாலுகா பருவாச்சி கிராமத்தில், தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில், இரண்டு ஏக்கர் பரப்பில் பப்பாளி சாகுபடியும், ஒரு ஏக்கரில் மா அடர் நடவும், இண்டு ஏக்கரில் பிளாஸ்டிக் மூடாக்குடன் கூடிய பப்பாளி சாகுபடி பகுதியை தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

தேசிய தோட்டக்கலைத்துறை சார்பில் உற்பத்தி, உற்பத்தி திறனை அதிகரித்து, முழுமையான சாகுபடியை உருவாக்க முயற்சி செய்யப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில், 2005 - 06ம் ஆண்டு முதல் அனைத்து யூனியனிலும், தோட்டக்கலைத் துறை இயக்கம் செயல்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், நெல்லி, பப்பாளி, எலுமிச்சை, கோகோ, வாழை, திசு வாழை, குமிழ் மலர்கள், உதிரிமலர்கள், மஞ்சள், மிளகு போன்ற தோட்டக்கலை பயிர்களும் சாகுபடி செய்யப்படுகிறது.

ஈரோடு மாவட்டத்தில், 295 ஏக்கரில் சொட்டுநீர் பாசனத்துடன், பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. பப்பாளி பயிர் செய்வதன் மூலம் ஒரு ஏக்கருக்கு, செலவு போக ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் லாபம் கிடைக்கும். பப்பாளி நடவு செய்து ஆறு மாதம் முதல் பயன் தரும். எனவே, அதிக லாபம் தரக்கூடிய பப்பாளியை விவசாயிகள் பயிர் செய்ய முன்வர வேண்டும்.

பப்பாளி பயிர் செய்யும் விவசாயிக்கு ஏக்கருக்கு, 75 சதவீத மானியம் வழங்கப்படும். பப்பாளிக்கு நான்கு ஏக்கர் வரை அதிகபட்சம் மானியம் வழங்கப்படும். தவிர, மா அடர் நடவு செய்தல் மூலம் ஏக்கருக்கு 50 சதவீத மானியம் பெறலாம்.

எனவே, குறைந்த செலவில், அதிக லாபம் தரும் பப்பாளி, மா அடர் நடவு செய்ய தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் ராபர்ட் வின்சென்ட், உதவி இயக்குனர் முனியாண்டி ஆகியோர் தெரிவித்தனர்.

**நெல் கொள்முதல் மையம் துவக்கம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 10,2012,01:54 IST

குருவித்துறை :குருவித்துறையில் நுகர்வோர் உணவுபொருள் வாணிப கழகம் சார்பில் நெல்கொள்முதல் மையம் துவக்கப்பட்டது.

ஊராட்சி தலைவர் கர்ணன் தலைமை வகித்தார். துணை தலைவர் பன்னீர் முன்னிலை வகித்தார். வாணிப கழக மண்டல மேலாளர் (பொறுப்பு) பாபு துவக்கி வைத்தார். வாணிப கழக அலுவலர் பழனிச்சாமி, ஊராட்சி செயலர் மந்தையன், விவசாயிகள், வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**வேளாண் பல்கலை விஞ்ஞானிகள் ஆய்வு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 09,2012,22:38 IST

ஆர்.எஸ்.மங்கலம் : கோவை நெல் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகளான பூச்சியியல் துறை பேராசிரியர் ரவீந்திரன் மற்றும் பயிர் மரபியல் துறை பேராசிரியர் ஜெயப்பிரகாஷ் ஆகியோர் ஆர்.எஸ்.மங்கலம் ஒன்றியம் உப்பூர், கடலூர் ஆகி கிராமங்களில், நெல் பயிரின் நிலை பற்றி ஆய்வு செய்தனர்.

களர், உவர் பதித்த பயிர் மற்றும் மண், நீர் மாதிரிகளை சேகரித்தனர். ஒன்றிய தலைவர் ஆனந்த், "கடற்கரையை ஒட்டியுள்ள கிராமங்களில் நெல் பயிர் உவர் தன்மையால் பயிர் வளர்ந்து கதிர் வாங்கும்போது சாவி ஆவதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இதனால், இப்பகுதிக்கு ஏற்ற ரகம் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்க, கோரினார். வேளாண் உதவி இயக்குனர் முகம்மது அப்துல் நசீர், துணை அலுவலர் தனதுரை, உதவி அலுவலர் ராதாகிருஷ்ணன் உடன் சென்றனர்.

---

தினகரன்

## கள்ளக்குறிச்சியில் பருத்தி விலை கடும் சரிவு கலங்கி நிற்கும் விவசாயிகள்

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சியில் பருத்தி விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால், விவசாயிகள் பெரிதும் கலக்கம் அடைந்துள்ளனர்.

விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி தாலுகாவில் மேலூர், இந்திலி, ஏமப்பேர், தென்கீரனூர், மலைக்கோட்டாளம், சின்னசேலம், கருங்குழி, தியாகதுருகம் பகுதியில் விருகாவூர், நாகலூர், சித்தலூர், பாளையங்கால், பொரசக்குறிச்சி, அசகளத்தூர், புது உச்சி மேடு, கூத்தக்குடி, கண்டாச்சிமங்கலம், வேளாக்குறிச்சி உள்ள பகுதிகளில் சுமார் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.

சாகுபடிக்கு தயாராக இருந்த பருத்தி செடிகள் புயலால் சேதமானது. பருத்தி செடிகள் காற்றில் சாய்ந்து மண்ணில் புதைந் தது. சில இடங்களில் அறுவடைக்கு தயாராக இருந்த பருத்தி பஞ்சுகள் காற்றில் வெளியேறியது. புயல் பாதிப்புல் இருந்து எஞ்சிய பருத்தி காய்களில் இருந்து பஞ்சுகளை சேகரித்து கள்ளக்குறிச்சி வேளாண்மை கூட்டுறவு மையத்துக்கு விவசாயிகள் கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர்.

ஆனால், ஒரு மூட்டை பருத்தி ரூ.4270க்கு விற்பனையானது. இது கடந்த ஆண்டை விட மிகவும் குறைந்த விலையாகும். கடந்த ஆண்டு ஒரு மூட்டை பருத்தி பஞ்சு அதிக பட்சமாக ரூ.7200க்கு விற்பனையானது, நேற்று கனங் கூர், கொங்கரப்பாளையம், ஈயனூர், மரூர், சோப்பாக் கம், திருக்கனுங்கூர் உள் ளிட்ட பகுதிகளில் இருந்து 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் 2743 பருத்தி மூட்டை கள் கொண்டு வந்தனர். இதில் ஒரு மூட்டை பருத்தி விலை ரூ.4129க்கு விற்பனையானது. ஏற்கனவே, புயலால் பருத்தி பாதிக்கப்பட்ட நிலையில் பருத்தி பஞ்சு விலையும் கடுமை யாக வீழ்ச்சி அடைந்திருப்பதால் விவசாயிகள் மிகவும் கலங்கி நிற்கின்றனர்.

இது குறித்து பொரசக்குறிச்சி விவசாயி ஆறுமுகம் கூறுகையில், இந்த ஆண்டு 4 ஏக்கர் பருத்தி சாகுபடி செய்தேன். மேலும் 2 மாதத்துக்கு முன் அடித்த புயலால் பருத்தி செடிகள் சேதமடைந்து காய்கள் உதிர்ந்து விட்டது. இதற்கு அரசு உரிய நிவாரணம் வழங்கவில்லை. எனவே பருத்தி விலை குறைவால் மிகுந்த நஷ்டம் அடைந்துள்ள விவசாயிகளுக்கு அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்’ என்றார்.

### தென்னையை தாக்கும் வண்டை அழிக்க செயல்விளக்க முகாம் நாளை நடக்கிறது

திருச்செங்கோடு: தென்னையை தாக்கும் வண்டுகளை அழிப்பது தொடர்பான செயல்விளக்க முகாம் நாளை நடக்கிறது.

இதுகுறித்து, திருச்செங்கோடு வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் நமச்சிவாயம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: திருச்செங்கோடு வட்டாரத்தில் தென்னையை தாக்கும் காண்டா மிருக வண்டு மற்றும் சிவப்பு கூன்வண்டுகளை அழிக்கும் செயல்விளக்க முகாம் நடத்தப்படுகிறது. இந்த முகாம், கொல்லப்பட்டி பாலியக்காடு நடேசனின் தோட்டத்தில் நாளை (10ம் தேதி) மாலை 4 மணி யளவில் நடக்கிறது. இதில், நாமக்கல் வேளாண் இணை இயக்குனர் பிரபாகரன் பங்கேற்கிறார். இந்த முகாமில், தென்னை மரம் வைத்துள்ள விவசாயிகளும், பொதுமக்களும் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு திருச்செங்கோடு வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் நமச்சிவாயம் கூறியுள்ளார்.

### மஞ்சள் வணிக வளாகம் போராட விவசாயிகள் முடிவு

ஈரோடு: ஈரோட்டில் மஞ்சள் வணிக வளாகங்கள் அமைப்பதில் மஞ்சள் வியாபாரிகளுக்கும், விவசாயிகளுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. ஒழுங்குமுறை விற்பனை கூடம், வெளிமார்க்கெட், கூட்டுறவு விற்பனை சங்கம் உள்ளிட்ட 4 மஞ்சள் ஏல விற்பனை மையங்களையும் ஒருங்கிணைத்து ஒருங்கிணைந்த மஞ்சள் வணிக வளாகம் அமைக்க வேண் டும் என்பது விவசாயிகளின் நீண்டகால கோரிக்கையாகும்.

ஒருங்கிணைந்த மஞ்சள் வணிக வளாகத்தில் விவசாயிகள் இருப்பு வைக்க தேவையான குடே £ன்,மின்விளக்கு, சாலை, குடிநீர், வங்கி என அனைத்து அடிப்படை வசதிகளையும் அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்த நிலையில் ஈரோடு மஞ்சள் விற்பனையாளர்கள் சார்பில் ஈரோடு அடுத்துள்ள செம்மாம்பாளையத்தில் தனியாக மஞ்சள் வணிக வளாகம் கட்டி வருகின்றனர்.

இந்த வணிக வளாகத்தில் விவசாயிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் இல்லை என்ப« தாடு ஒருங்கிணைந்த மஞ்சள் வணிக வளாகம் அமைப்பதற்கு பதிலாக தனியார் மஞ்சள் வணிக வளாகம் மட்டுமே அமைக்கப்பட்டு வருவதாக விவசாயிகள் புகார் கூறிவந்தனர். எனவே மஞ்சள் வணிக வளாகத்தில் ஏலம் நடத்தக்கூடாது என்று விவசாய சங்கங்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இது குறித்து தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் பெரியசாமி கூறியதாவது, மஞ்சள் வணிகர்கள் சுய நலத்திற்காக விவசாயிகளை பயன்படுத்த தொட ங்கி உள்ளனர். விவசாயிகளின் எதிர்ப்பை மீறி புதிய இடத்தில் ஏலம் நடத்த மஞ்சள் வணிகர்கள் முயற்சி மேற்கொண்டால் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்படும். இவ்வாறு பெரியசாமி கூறினார்.

## பயறு வகை பயிர்களின் உற்பத்தி திறனை அதிகரிக்க ஊக்கமருந்து வாங்கி பயனடைய அழைப்பு

தஞ்சை: தஞ்சை யில் உள்ள மண், நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் சந்திரசேகரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:
விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில் பயறு வகை பயிர்களின் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மூலம் தயாரிக்கப்பட்ட பயறு அதிசயம் (பிளஸ் ஒண்டர்) மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் 800 கிலோ விற்பனைக்கு உள்ளது. ஒரு ஏக்கருக்கு தேவையான பயறு அதிசயத்தின் விலை ரூ.222. தேவைப்படக்கூடிய விவசாயிகள் பயறு அதிசயத்தை வாங்கி இலை வழி யாக பயிரின் பூக்கும் பருவத்தில் தெளித்து உற்பத்தி திறனை அதிகரித்துக் கொள் ளலாம். இவ்வாறு சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகளுக்கு நெல் விதை கிராம திட்ட பயிற்சி

தஞ்சை: திருவையாறு ஒன்றியத்தில் 10 கிராமங்களில் விவசாயிகளுக்கு நெல் விதை கிராம திட்ட பயிற்சி முகாம் நடந்தது.
திருவையாறு ஒன்றியத்தில் நெல் விதை கிராம திட்டத்திற்கு 10 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அதில் ஒன்றான செந்தலையில் பயிற்சி முகாம் நடந் தது. திருவையாறு எம்எல்ஏ ரத்தினசாமி, பயிற்சி முகாமை துவக்கி வைத்தார்.
இதைதொடர்ந்து கோனேரிராஜபுரம், ராயம்பேட்டை, செம்மங்குடி, ஆச்சனூர், திருப்பழனம், புனவாசல், திருவாலம்பொழில், அம்மையகரம், அள்ளூர் ஆகிய கிராமங்களில் பயிற்சி நடத்தப்பட்டது. அந்தந்த ஊராட்சி தலைவர்கள் தலைமை வகித்தனர். உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.
தரமான விதை உற்பத்தி, திருந்திய நெல் சாகுபடி முறை, ஒருங்கிணைந்த உர நிர்வாகம், ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாகத்தின் தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண்மை உதவி இயக்குனர்(பொ) சிவகாமி, வேளாண் துணை இயக்குனர் ராமதாஸ்(மத்திய திட்டங்கள்), விதைச்சான்று வேளாண்மை உதவி இயக்குனர் பாண்டியராஜன், விதைச்சான்று வேளாண்மை

அலுவலர் லதா மற்றும் திருவையாறு துணை வேளாண்மை அலு வலர் அயூப்கான் ஆகியோர் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

ஒவ்வொரு கிராமத்தி லும் 100 விவசாயிகள் பயிற்சியில் கலந்துகொண்டனர். ஒவ்வொரு பயிற்சியிலும் வேளாண்மை நவீன தொழில்நுட்பங்கள் குறித்த கருத்து காட்சிகளும் வைக்கப்பட்டிருந்தன.